# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாரூர்

**முன்னிலை:** திரு. S. முஹம்மதுபாசில், M.Sc., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவாரூர்.

2025- ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20-ஆம் நாள் புதன்கிழமை
(திருவள்ளுவராண்டு 2056, விசுவவாசு வருடம் ஆவணி மாதம் 4-ம் நாள்)

**அசல் வழக்கு எண். 77/2023**

**CNR.No. TNTV04-000112-2023**

சம்சாத்பேகம் ..... வாதி

/எதிர்/

முஹம்மது ரிபாய் ..... பிரதிவாதி

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக கடந்த 12.08.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. மணிகண்டன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. U. லெனின் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி கடந்த 12.12.2023 ம் தேதியன்று அழைக்கப்பட்டு வருகையில்லாததால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டு, வாதி தரப்பு வாதம், சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள்வரையில் இந்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வந்த இந்த வழக்கில் இன்று (20.08.2025) இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

வாதிக்கும், பிரதிவாதிக்கும் கடந்த 12.11.2005 ம் தேதியன்று நடைபெற்ற திருமண பந்தத்தின் விளைவாக ஏற்பட்ட கணவன், மனைவி உறவை ரத்து செய்து பரிகாரம் வழங்க

வேண்டியும் மற்றும் வழக்கின் செலவுத்தொகையை பிரதிவாதி, வாதிக்கு செலுத்த வேண்டியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம்</u> :

**2.1.** மனுதாரரும், எதிர்மனுதாரரும் கணவன், மனைவி ஆவார்கள். இருவருக்கும் இருதரப்பு உறவினர்கள் மற்றும் கிராம முக்கியஸ்தர்கள் ஏற்பாட்டின்பேரில் கடந்த 12.11.2005 ம் தேதியன்று ஜாமீஆ மஸ்ஜித்தில் கூத்தூர் என்ற இடத்தில் உறவினர்கள் முன்னிலையில் பெரியோர்கள் ஆசிர்வாதத்தில் திருமண (நிக்காஹ்) நடைபெற்றது. மேற்படி திருமணத்தை மனுதாரர் தரப்பில் செலவு செய்து நடத்தினார். எதிர்மனுதாரர் வற்புறுத்தி கேட்டுக் கொண்டதற்கிணங்க மனுதாரர் தரப்பில் அவருக்கு 47 பவுன் நகையும், கட்டில், மெத்தை, பீரோ, சீர்வரிசை பொருட்கள் சீதனமாக செய்யப்பட்டது. அவை அனைத்தும் தற்போது எதிர்மனுதாரர் வசமே உள்ளது. திருமணம் முடிந்து சில வருடங்கள் இருவருடைய வாழ்க்கையும் சுமூகமாக சென்றது. எதிர்மனுதாரர் இல்லத்தில் மனுதாரர் வாழ்ந்து வந்த நிலையில், கடந்த 10.11.2006 ம் தேதியன்று பாத்திமா ஃபாஹியா என்ற பெண் குழந்தை பிறந்தது. மேற்படி இருவரும் தற்போது மனுதாரர் வசமே இருந்து வருகின்றனர். இந்நிலையில், காலப்போக்கில் எதிர்மனுதாரர் நடவடிக்கையில் மாற்றம் தெரிய ஆரம்பித்தது. தினமும் குடித்துவிட்டு வந்து எதிர்மனுதாரர், மனுதாரரை அடித்து சித்ரவதை செய்து வந்துள்ளார். மனுதாரருக்கு ஆதரவாக யார் பேச வந்தாலும் மனுதாரருடன் இணைத்து பேசுவது வாடிக்கையாகி விட்டதாகவும், மனுதாரர் பலமுறை தனது பெற்றோர் வீட்டிற்கு கோபித்துக் கொண்டு தன் குழந்தைகளுடன் சென்றுள்ளார். எதிர்மனுதாரர் பின்பு தான் திருந்தி விட்டதாகவும், இனி மனுதாரர் நடவடிக்கையில் சந்தேகம் கொள்ள மாட்டேன் என்றும் அடித்து பிரச்சனை செய்ய மாட்டேன் என்றும் உறுதி கூறி

பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பலமுறை பஞ்சாயத்து பேசப்பட்டு அழைத்துச் சென்றுள்ளார். அவ்வாறு அழைத்துச் சென்ற பிறகு எதிர்மனுதாரர் தன்னுடைய நடவடிக்கைகளை மாற்றிக் கொள்ளாமல் பழையபடி மனுதாரரை மீண்டும் பிரச்சனை செய்துள்ளார். குழந்தைகளை கவனிக்காமலும், மனுதாரரை கவனிக்காமலும் கணவன், மனைவிக்கு செய்ய வேண்டிய எந்தவித அடிப்படை பணியையும் செய்யாமல் இருந்து வந்துள்ளார். இதனால் கடந்த 26.07.2009 ல் கூத்தாநல்லூர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து மனு எண். 85/2019 என நம்பராகி இருவரையும் அழைத்து பேசி அறிவுரை கூறி அனுப்பி வைத்தார்கள்.

தனியார் பள்ளியில் 11ம் வகுப்பு பயின்று வந்த மகள் பாத்திமா ஃபாஹியா என்ற பெண் குழந்தை பாதியிலேயே கல்வி படிப்பை நிறுத்த வேண்டிய அவல சூழ்நிலை எதிர்மனுதாரர் நடவடிக்கையால் மனுதாரருக்கு ஏற்பட்டது என்றும், பலமுறை மனுதாரர் எதிர்மனுதாரர் தன்னுடைய தவறுகளை திருத்திக் கொண்டு தனக்காகவும், தன் மகளுக்காகவும் வாழ்வார் என்று நம்பியிருந்தவருக்கு ஏமாற்றமே மிஞ்சியதாகவும், மனுதாரர் தன்னுடைய குடும்பத்தினரால் திருமணத்தின்போது செய்யப்பட்ட நகைகளையும் எதிர்மனுதாரர் விற்று வீண்செலவு செய்தும், கார் வாங்குவதற்காக ரூ.4 இலட்சம் கொடுக்கப்பட்டதையும் அழித்து விட்டார். மனுதாரர் தன்னுடைய குழந்தைகளை வைத்துக் கொண்டு எதிர்மனுதாரருடன் மேலும் இல்லறம் செய்தால் அது தன்னுடைய வாழ்க்கையையும் தன் மகள் எதிர்காலத்தையும் பாதிக்கும் என்பதால் வேறு வழியின்றி மனுதாரர், எதிர்மனுதாரரை விட்டு பிரிந்து தன் குழந்தைகளுடன் தனது பெற்றோர் வீட்டில் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக இருந்து வருகிறார். எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்வதற்காக மனுதாரர் எடுத்த அனைத்து நடவடிக்கைகளும் விழலுக்கு இறைத்து நீராக வீணாகி போனது. இனியும்

மனுதாரர், எதிர்மனுதாரடுன் சேர்ந்து வாழ அறவே வாய்ப்பு இல்லாத காரணத்தினால் வேறு வழியின்றி மனுதாரர், எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ அறவே வாய்ப்பு இல்லாத காரணத்தினால் வேறு வழியின்றி மனுதாரர் எதிர்மனுதாரரிடமிருந்து விவகாரத்து பரிகாரம் கோரி சமகம் நீதிமன்றத்தில் விவாகரத்து மனு தாக்கல் செய்துள்ளார். எனவே, வாதிக்கும், பிரதிவாதிக்கும் கடந்த 12.11.2005 ம் தேதியன்று நடைபெற்ற திருமண பந்தத்தின் விளைவாக ஏற்பட்ட கணவன், மனைவி உறவை ரத்து செய்து பரிகாரம் வழங்க வேண்டி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜராகி எதிர்வழக்குரைக்காக வாய்தா போடப்பட்டிருந்த நிலையில், பிரதிவாதி நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜராகாததால் தோன்றாத் தரப்பினராக்கப்பட்டுள்ளார்.

**4.** வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆகவும், அவரது சகோதரி வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர். வா.சா.1 மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 வரையிலான சான்றாவணங்களும், வா.சா.2 ன் மூலம் வா.சா.ஆ.11 ஆவணமும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதி தரப்பில் சாட்சிகள் எவரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**5. <u>தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை</u>** :-

இவ்வழக்கில் தீர்வு காண வேண்டிய பிரச்சனை யாதெனில், வாதி கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

**6. <u>தீர்வு</u>** :-

**6.1.** வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. வாதி தரப்பு வாதம்

கேட்கப்பட்டது. இவ்வழக்கு பிரிவு 2 ன் கீழ் வாதி / மனைவியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.2.** வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வழக்குரையை அனுசரித்து சாட்சியம் அளித்துள்ளார். வா.சா.2 வாதியின் உடன் பிறந்த சகோதரி விசாரணை செய்யப்பட்டு வாதி தரப்பு கட்சிக்கு அனுசரித்து சாட்சியம் அளித்துள்ளார். மேலும், வாதி தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. கடந்த 12.11.2005 ம் தேதியிட்ட வாதிக்கும், பிரதிவாதிக்கும் இடையே நடைபெற்ற திருமணத்தின் திருமண அழைப்பிதழ் அசல் வா.சா.ஆ.1 ஆகவும், கடந்த 14.11.2022 ம் தேதியிட்டு வாதியின் வழக்கறிஞர் பிரதிவாதிக்கு அவரது இரண்டு முகவரிக்கும் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.2 ஆகவும், கடந்த 15.11.2022 மற்றும் 16.11.2022 ஆகிய தேதிகளில் வழக்கறிஞர் அறிவிப்பினை மேற்படி இரண்டு முகவரிகளிலும் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை (எண்ணம் 2) அசல் வா.சா.ஆ.3 ஆகவும், கடந்த 28.07.2022 ம் தேதியிட்டு கூத்தாநல்லூர் காவல்நிலையத்தில் வாதி, பிரதிவாதிக்கு எதிராக கொடுத்த புகார் மனு மற்றும் அதனை மாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர், சமூக நலத்துறை அதிகாரி மற்றும் தமிழக முதலமைச்சரின் தனிப்பிரிவு ஆகியவற்றிற்கு அனுப்பியதற்கான அஞ்சல் ரசீதுகள் நகல் வா.சா.ஆ.4 ஆகவும், அதுபோல திருவாரூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்திற்கு வாதி அனுப்பிய புகார்மனுவும், அதன் நகல்கள் தமிழக முதலமைச்சர், மாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் மற்றும் சமூக நலத்துறை ஆகியோருக்கு அனுப்பியது குறித்தும் வா.சா.ஆ.5 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

வாதிக்கும், பிரதிவாதிக்கும் இடையே கடந்த 21.11.2022 ம் தேதி திருமண முறிவிற்கான முன் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டதற்கு ஆதரவாக மேற்படி திருமண முறிவு தலாக் முன் ஒப்பந்தம் வா.சா.ஆ.6 ஆகவும், தொடர்ந்து கூத்தாநல்லூர் காவல்நிலையத்தில் வாதியால், பிரதிவாதிக்கு எதிராக பல்வேறு தேதிகளில் கொடுக்கப்பட்ட புகார் மனுக்கள் வா.சா.ஆ.7 மற்றும் வா.சா.ஆ.8 ஆகவும், திருவாரூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் வாதியின் மனுவினை பெற்றுக்கொண்டு கொடுக்கப்பட்ட மனு ரசீது வா.சா.ஆ.9 ஆகவும், வாதி மற்றும் அவரது சகோதரியான வா.சா.2 ஆகியோரின் ஆதார் அடையாள அட்டை நகல் வா.சா.ஆ.10 மற்றும் வா.சா.ஆ.11 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**6.3.** மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலித்த வகையில், வாதிக்கும், பிரதிவாதிக்கும் இடையே கடந்த 12.11.2005 ம் தேதியில் முஸ்லீம் சமுதாய முறைப்படி திருமணம் நடைபெற்றது என்பதையும், தரப்பினர்களுக்கு பாத்திமா ஃபாஹியா என்ற பெண் குழந்தை உள்ளது என்பதும் தரப்பினர்களிடையே பல ஆண்டுகளாக குடும்ப பிரச்சனை இருந்து வருகிறது என்பதும் தெரிய வருகிறது. குறிப்பாக, பிரதிவாதி மது போதைக்கு அடிமையாகி குடும்பத்திற்கும், குழந்தைக்கும் தேவையான பொருட்கள் வாங்கி தராமல் வருமானம் முழுவதையும் மதுவிற்கு கொடுத்து குடித்துவிட்டு பிரதிவாதியையும், அவரது மகளையும் அடித்தும், அசிங்கமான வார்த்தைகளால் திட்டியும், வாதியின் மகளை மேற்கொண்டு படிக்க தடை செய்தும் வருவதனால் பிரதிவாதியுடன் சேர்ந்து வாழ முடியாத சூழ்நிலையை பிரதிவாதியே உருவாக்கி கொண்ட காரணத்தினால் வாதி விவாகரத்து கோரி கடந்த 14.11.2022 அன்று பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்பதும் தெரிய வருகிறது.

தொடர்ச்சியாக பிரதிவாதியின் குடும்ப வன்முறை காரணமாக வாதி கடந்த 28.07.2022, 19.08.2023 மற்றும் 27.07.2022 ஆகிய தேதிகளில் கூத்தாநல்லூர் காவல்நிலையத்திலும், 28.07.2022 அன்று திருவாரூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்திலும் பிரதிவாதிக்கு எதிராக புகார் அளித்துள்ளதற்கு ஆதரவாக முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள வா.சா.ஆ.4 , 5, 7 மற்றும் 8 ஆகிய ஆவணங்களை பரிசீலித்த வகையில், வாதி பிரதிவாதியின் தொடர்ச்சியான குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பதும் தெரிய வருகிறது.

மேலும், கடந்த 21.11.2022 ம் தேதியன்று தரப்பினர்களிடையே மத்தியஸ்தம் பேசப்பட்டு திருமண முறிவிற்கான ஒரு முன் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு அதில் பிரதிவாதி எக்காரணம் கொண்டும் குடித்துவிட்டு வீண் சண்டை மற்றும் ஊர் வம்பு இழுத்தல் செய்யக்கூடாது என்றும், குடும்பத்திற்கு தேவையான பொருட்கள் மற்றும் குடும்பத்தை பாதுகாக்க வேண்டுமென்றும், குடும்பத்தினரையோ, அசையும், அசையா பொருட்களையோ, சொத்துக்களையோ சேதப்படுத்தினால் தற்சமயம் ஒத்தி வைக்கப்பட்டுள்ள விவாகரத்து நடவடிக்கைகளை நீதிமன்றத்தின் மூலம் வாதி தீர்வு கண்டு கொள்ளலாம் என எழுதப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் சாட்சி முன்னிலையில் வாதி, பிரதிவாதி இருவரும் கையெழுத்து செய்துள்ளது தெரிகிறது.

இருப்பினும், மேற்படி சமரசத்திற்கு பிறகும் பிரதிவாதியின் நடவடிக்கையில் எவ்வித மாற்றமும் இல்லாத நிலையில், வாதி விவாகரத்து கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

பிரதிவாதி தினமும் குடித்து விட்டு வந்து வாதியை அடித்து சித்திரவதை செய்து வந்துள்ளதும், வாதிக்கு ஆதரவாக யார் பேச வந்தாலும் அவர்களை வாதியுடன் இணைத்து பேசுவதும், வாதியின் மகளின் கல்வி படிப்பை பாதியிலேயே நிறுத்த வேண்டிய அவல சூழ்நிலைக்கு வாதியை தள்ளியதும், திருமணத்தின்போது வாதிக்கு செய்யப்பட்ட நகைகளை விற்று வீண் செலவு செய்தும், குடும்ப வன்முறையில் பிரதிவாதி தொடர்ந்து ஈடுபட்டு வருவதாக கூறியுள்ள காரணங்கள் அனைத்தும் முஸ்லீம் திருமண முறிவு சட்டம் பிரிவு 2(viii) ன் கீழ் cruelty ஆகும்.

வாதிக்கும், பிரதிவாதிக்கும் இடையே மத்தியஸ்தம் பேசப்பட்டும் பிரதிவாதியின் நடவடிக்கைகளில் மாற்றம் இல்லாத காரணத்தினால் வேறு வழி இல்லாமல் பிரதிவாதியின் குடும்ப வன்முறையின் காரணமாக வாதி அவரது தங்கையான வா.சா.2 பாதுகாப்பிலும், பராமரிப்பிலும் அடியக்கமங்கலத்தில் உள்ள அவரது வீட்டில் தனது மகளுடன் இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு ஓர் ஆண்டிற்கு மேலாக வசித்து வருவது வா.சா.2 சாட்சியத்தின் மூலம் தெரிய வருகிறது.

இந்த வகையில், வா தியும், பிரதிவாதியும் மீண்டும் ஒன்றிணைய முடியாத சூழலில் பிரிந்து வாழ்ந்து வருவது வாதி தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் மூலம் மெய்ப்பிக்கப்பட்டுள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. பிரதிவாதி தரப்பில் போதிய வாய்ப்பளிக்கப்பட்டிருந்தும் அதனை மறுதளிக்க முன்னிலையாகாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார். எனவே, வாதிக்கும், பிரதிவாதிக்கும் கடந்த 12.11.2005 தேதியில் முஸ்லீம் சமுதாய முறைப்படி நடைபெற்ற திருமணமானது ரத்து (Dissolved) செய்யப்பட்டு வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது.

7. **முடிவாக**, இவ்வழக்கு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை முழுவதும் என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2025-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 20-ஆம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/- S. முஹம்மது பாசில்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவாரூர்.

**வாதி தரப்பு சாட்சிகள்** :

வா.சா.1 சம்சாத்பேகம்

வா.சா.2 ரபிக்காபானு

**வாதி தரப்பு சான்றாவணங்கள்** :

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 12.11.2005 | வாதிக்கும், பிரதிவாதிக்கும் இடையே நடைபெற்ற திருமண அழைப்பிதழ் (அசல்) |
| வா.சா.ஆ.2 | 14.11.2022 | வாதி, பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு (அலுவலக நகல்) |
| வா.சா.ஆ.3 | 15.11.2022 | வழக்கறிஞர் அறிவிப்பினை பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை (எண்ணம் 2) அசல் |
| வா.சா.ஆ.4 | 28.07.2022 | கூத்தாநல்லூர் காவல்நிலையத்தில் வாதி கொடுத்த புகார் மனு (நகல்) |
| வா.சா.ஆ.5 | 28.07.2022 | திருவாரூர் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் வாதி கொடுத்த புகார் மனு (நகல்) |
| வா.சா.ஆ.6 | 21.11.2022 | தலாக் முன் ஒப்பந்தம் (அசல்) |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.7 | 19.08.2023 | கூத்தாநல்லூர் காவல்நிலையத்தில் வாதி கொடுத்த புகார் மனு (நகல்) |
| வா.சா.ஆ.8 | 27.07.2023 | கூத்தாநல்லூர் காவல்நிலையத்தில் வாதி கொடுத்த புகார் மனு (நகல்) |
| வா.சா.ஆ.9 | 20.11.2022 | திருவாரூர் அனைத்து மகளிர் காவல்நிலைய மனு ரசீது (அசல்) |
| வா.சா.ஆ.10 | -- | வாதியின் ஆதார் அடையாள அட்டை (நகல்) |
| வா.சா.ஆ.11 | -- | ரபிக்காபானு ஆதார் அடையாள அட்டை (நகல்) |

**பிரதிவாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் சான்றாவணங்கள்** :

இல்லை

(ஓம்/- S. முஹம்மது பாசில்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவாரூர்.